ஸ்ரீ:

ஸ்ரீராமாநுஜன் 14

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாய தத்துவங்களை யுணர்த்த
மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை.

[மதராஸ் ஸத்க்ரந்த ப்ரகாசந ஸபையின் வெளியீடு]

ஆசிரியர்: ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.

10–10–1949 விரோதிஹு ஐப்பசிமீ

எம்பெருமானார் புநரவதாரப் பெருமை

மணவாளமாமுனிகளின் வைபவச் சுருக்கம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பல ஆசிரியர்கள் விளங்கினும் மூவர் முக்கியமாகக் கொள்ளப்பட்டுள்ளார்கள். நம்மாழ்வாரும் நம்இராமாநுசனும் நம் மணவாளமாமுனிகளுமாவர். ஆனதுபற்றியே 'ஆழ்வார் திருவடிகளே சரணம்; எம்பெருமானார் திருவடிகளே சரணம்: ஜீயர் திருவடிகளே சரணம்' என்று ஸ்ரீ வைஷ்ணவவுலகம் நிச்சலும் அநுஸந்தானம் செய்து வருகின்றது. **முதன்மையான ஆசாரியர் நம்மாழ்வாரென்றும், இடையாசிரியர் எம்பெருமானார் [ஸ்ரீராமாநுஜர்] என்றும், கடையாசிரியர் மணவாள மாமுனிகள்** என்றும் கொள்க.

இவர்களுள் நம்மாழ்வாருடைய பெருமையிற் காட்டிலும் ஸ்ரீராமாநுஜருடைய பெருமை மிக்கது. இவ்விருவர் பெருமையினும் மணவாளமாமுனிகளின் மேன்மை ஒப்புயர்வற்றது. ஆசார்ய பதவியை அலங்கரிப்பதற்கேற்ற நற்குணங்களனைத்தும் மாமுனிகள்திறத்து மாத்திரமே நன்கு குடிகொண்டிருந்தன வென்றால் இஃது இறையும் அதிசயோக்தியாகாது.

இப்பேராசிரியரின் சரிதை அமுதக் கடல் போன்று அளவுகடந்திருந்தாலும் அதினின்று சில திவ்லைகள் மாத்திரமே ஈண்டு அநுபவிக்கப்படுகின்றன. இது பக்தர்களுக்கு நித்யாநுஸந்தானமாகத் தகும்.

இவர் திருவவதரித்தது ஆழ்வார்திருநகரியில். இவரது திருத்தந்தையாரின் திருநாமம் **திருநாவீறுடையபிரான் தாஸரண்ணர்.** கலியுகாதி நாலாயிரத்து நானூற்றெழுபத்திரண்டாவதான ஸாதாரண வருடத்தில் ஐப்பசித் திங்களில் திருமூல நன்னாளில் **ஆதிசேஷனுடைய** அம்சமாகவும் **ஸ்ரீ** ராமாநுஜருடைய அபராவதாரமாகவும் தோன்றினர்.

இங்ஙனே உலகுக்கெல்லாம் ஓருயிராகத் தோன்றிய திவ்யமூர்த்திக்கு ஸ்ரீ ரங்கநாதனுடைய திரு நாமத்தைச் சாத்த விரும்பிய பெரியார், **'அழகிய மணவாளன்'** எனப் பெயரிட்ட

னர். அழகிய மணவாள நாயனர் எனச் சிறப்புத் திருநாமமாக வழங்கி வந்தது. சுக்கிலபக்ஷத்துச் சந்திரன்போல் கலைகள் நிரம்பி வளர்ந்து வருகின்றார். உபநயநம் முதலிய வர்ணோசித ஸம்ஸ்காரங்களும் அடைவே நடைபெற்றன. இராமபிரானும் கண்ணபிரானும் இயற்கையில் ஸர்வஜ்ஞர்களாயிருந்தும் லோக மரியாதைக்கிணங்க வஸிஷ்ட விச்வாமித்ர ஸாந்தீபநிகளிடத்திலே கலைகள் பயின்றவாறாக இவ்வாசிரியரும் உலக நடைக்கிணங்க நல்லாசிரியர் பக்கலிலே வேதங்களையும் வேதாங்கங்களையும் மற்றும் ஸகல சாஸ்த்ரங்களையும் ஓதியுணர்ந்து,

"சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லாவறநெறி யாவுந் தெரிந்தவன்"
என்னும்படி விளங்கினார். உசித காலத்தில் இல்லற வாழ்க்கையும் ஏற்று,

"இரும்பொழுதேத்தி யெல்லை யில்லாத் தொன்னெறிக்கண் நிலை நின்ற தொண்டர்"
என்னும்படியே விசிஷ்டபரமைகாந்தியாக விளங்கிவந்தார்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாய பரம்பரையில் பிள்ளைலோகாசார்யர் என்பவர் ஒரு பேராசிரியர். இவரே பரம கருணையோடு ரஹஸ்யப் பொருள்களை முதன் முதலாகப் பதினெட்டு நூல்கள் மூலமாய் வெளியிட்டருளின பெருவள்ளல். அவருடைய திருவடிகளில் நெடுநாள் பணிந்திருந்து அரும்பெரும் பொருள்களை நன்குணர்ந்தவரும் ஆழ்வார்களின் ஈரச் சொற்களிலே ஈடுபாடு காரணமாகத் திருவாய்மொழிப் பிள்ளையென்று சிறப்புத் திருநாமம் பெற்றவருமான திருமலையாழ்வாரென்கிற ஆசாரியரை யடிபணிந்து ஸத்ஸம்ப்ரதாயார்த்த நிதிகளைப் பெற்றார் இவ்வாசிரியர்.

அக்காலத்தில், திவ்வியப் பிரபந்தங்களின் சீரிய பொருள்களை யெடுத்துரைப்பார் மிகச் சிலரேயிருந்ததனால் இவ்வாசிரியர் தமிழ்வேத ரஹஸ்யப் பொருள்களின் பிரவசனத்தில் தலைமை பெற்று விளங்கவேணுமென்று ஆசைகொண்ட இவரது ஆசாரியர் [திருவாய்மொழிப் பிள்ளை] இவரை அக்கைங்கர்யத்திலே திடமாக ஊன்ற வைத்தார். ஸம்ஸ்க்ருத வேத வேதாங்கங்களில் ஆழ்ந்து அவற்றின் உண்மைப் பொருள்களை உள்ளபடி யுணர்ந்தவர்களே தமிழ் வேதத்தை நன்கு நிர்வஹிக்க வல்லவர்களாதலால் இப்பேராசிரியர்க்கு இக்கைங்கர்யம் கிடைத்தது மிகப்பொருத்தமாயிற்று.

முற்காலத்தில் ஆசாரியர்களனைவரும் தரிசன நிர்வாஹம் செய்துகொண்டு வீற்றிருந்து எழுந்தருளியிருந்தவிடம் திருவரங்கம் பெரிய கோயிலேயாதலால் அந்தத் திருப்பதியில் வாழ்ந்து கொண்டு தர்சன ஸ்தாபனம் செய்தருளுமாறு தம் ஆசாரியரால் நியமிக்கப் பெற்ற இவ்வாசிரியர் நாளடைவில் திருவரங்கத் திருப்பதியிலே வந்து சேர்ந்து, அங்கு ஸ்ரீரங்கநாதனாலும் ஸகல ஸ்ரீ வைஷ்ணவர்களாலும் வெகுமானிக்கப் பெற்று அவ்விடத்தில் அடிபணிந்த சிஷ்யர்களுக்கு அரிய பெரிய அர்த்தங்களை அருளிச்செய்துகொண்டு வாழ்ந்து வந்தார். இல்லற வாழ்க்கையில் வெறுப்புற்றுத் துறவறம் பூண்டு 'மணவாள மாமுனிகள்' என்கிற திருநாமத்துடன் விளங்கி நின்றார். இப்படி இவர் உத்தமாச்ரமத்தை ஏற்றுக்கொள்வதற்கு முன்னமே வானமாமலையிலே மஹாஜ்ஞாந நிதியாக எழுந்தருளியிருந்த அழகிய வரதர் என்பவர் பரம விரக்தியினாலே ஆச்ரமஸ்வீகாரஞ்செய்து ஸ்ரீராமாநுஜ ஜீயரென்று திருநாமம் பெற்றிருந்தவர் இவ்வாசிரியர் திருவடிகளில் ஆச்ரயித்திருந்தார். அவரே தலைவரான சிஷ்யர். பிறகு கோயி லண்ணன், பிரதிவாதிபயங்கரமண்ணன், எறும்பியப்பா முதலான பலபல மஹான்கள் சிஷ்யர்களாகப் பணிந்து இவரது பெருமைகளை வடமொழி தென்மொழி நூல்களினால் வெளியிட்டு உய்ந்து போந்தார்கள்.

அத்தகைய சிஷ்ய வர்க்கங்களில் எண்மர் தலைமை பெற்று அஷ்டதிக் கஜங்களென்கிற சிறப்புப் பெயரும் பெற்று உலகம் போற்ற நின்றார்கள். அவர்களது திருநாமம்—1. வானமாமலை ஜீயர். 2. பட்டர்பிரான் ஜீயர். 3. திருவேங்கடராமாநுஜ ஜீயர். 4. கோயிலண்ணன். 5 பிரதிவாதி பயங்கரமண்ணன். 6. எறும்பியப்பா. 7. அப்பிள்ளை. 8. அப்பிள்ளார்.

இவர்களுள் 'எறும்பியப்பா' என்பவர் வந்து ஆச்ரயித்த விதம் வெகு விசித்திரமானது. சோளஸிம்ஹபுரமென்று பிரசித்தமான திருக்கடிகைக்கு அருகிலுள்ள எறும்பி யென்னும் அக்ரஹாரத்திலே தோன்றி தேவராஜாசார்யரென்று திருநாமம் பூண்டிருந்த இவர் மஹாவித்வான். இவர் ஒருகால் ஸ்ரீரங்கத்திற்கு வந்து அங்கே தம் உறவினரான அண்ணனது திருமாளிகையில் தங்கியிருக்கையில் அவரோடு கூட மணவாளமாமுனிகளின் காலக்ஷேப கோஷ்டியிலும் அந்வயிக்கப் பாக்கியம் பெற்றார். அப்போது மாமுனிகளின் ஸர்வதோமுகமான ப்ரஜ்ஞாவிசேஷத்தைக் கண்டு களித்தும், அவரது திருவடிகளில் ஆச்ரயிக்க பாக்யபரிபாகம் விளையாமலே அங்கு தீர்த்த ப்ரஸாதங்களும் பெறாமலே தம்மூருக்குத் திரும்பிவிட்டார். தம் திருமாளிகையிலுள்ள பெருமாளுக்குத் திருவாராதனம் கண்டருளப் பண்ணப் புகுந்து கோவிலாழ்வார் திருக்காப்பை நீக்கப் பார்க்கையில் திருக்காப்பு திறக்கப் பெற்றதில்லை. பல வுபாயங்கள் செய்து பார்த்தும் ஒருபடியாலும் திறக்கப்போகாமையாலே மிக வருந்தி அமுது செய்யாமலே, 'இது என்ன அபசாரபலனோ!' என்று மனம் நொந்து மூர்ச்சித்துக் கிடந்தார்.

அன்றிராக்கனவில் அவருடைய ஆராதனப் பெருமாளான சக்ரவர்த்தி திருமகன் எதிரே வந்து தோன்றி 'நமக்கு ஆருயிராய் உலகுக்கு ஒருயிரான மணவாளமாமுனிகளின் திருவடிகளிலே பணியாமல் மீண்டு வந்தீராதலால் உமக்கு நாம் கதவு திறந்திலோம்; ஆதிசேஷன் தானே மாமுனிகளாக வந்து அவதரித்தமை அறிவீராக. அவரது திருவடிகளிற் சென்று ஆச்ரயித்துத் தூய்மை பெற்று வந்தாலன்றி உமது கையில் நாம் திருவாராதனம் கொள்வதில்லை' என்று சொல்லி மறைய, அப்பாவும் துயிலெழுந்து மிக வியந்து இவ்வதிசயத்தை அன்பர்களுக்கு அறிவித்து அப்போதே புறப்பட்டுத் திருவரங்கம் சென்று சேர்ந்து மாமுனிகளின் திருவடிகளிலே வேரற்ற மரம்போலே விழுந்து இச்செய்தியை விண்ணப்பம் செய்து அபராதக்ஷாமணம் செய்துகொண்டு 'இனி அடியேனுக்கு இத்திருவடி நிழலொழியப் புகலிடம் வேறொன்றில்லை; நெறி காட்டி நீக்கப்பாராதே அடியேனை அத்தாணிச் சேவகத்திற்கு ஆட்படுத்திக் கொண்டருளவேணும்.' என்று மிகவும் பிரார்த்தித்து மாமுனிகளின் பரிபூர்ண அநுக்ரஹத்தைப் பெற்று அன்று தொடங்கி ஸகலார்த்தங்களும் சிக்ஷிக்கப் பெற்றுக் கிருதார்த்தரானார். இவர் பரமபக்தி தலையெடுத்து மாமுனிகள் விஷயமான காவ்யம் நாடகம் சம்பூ ஸ்தோத்ரங்கள் பலவும் பணித்தார். இவர் தம்முடைய இல்லத்தில் பரம்பரையாக ஆராதிக்கப்பட்டு வந்த சக்ரவர்த்தி திருமகன் ஸ்தானத்தில் மணவாளமாமுனிகளையே எழுந்தருளப் பண்ணி ஆராதித்து வந்தார்.

மாமுனிகளுக்கு அமைந்துள்ள பெருமைகளில் தலையான பெருமை யொன்று கேண்மின். இமவந்தந்தொடங்கி இருங்கடலளவுமுள்ள எல்லாத் தலங்களிலும்,

"ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்"

என்கிற இவ்வாசிரியரது திவ்விய தனியனே திவ்யப்பிரபந்தங்களின் அநுஸந்தானங்களில் நியதிபெற்று விளங்குகின்றது. "மணவாள மாமுனியே இன்னமொரு நூற்றாண்டிரும்" என்று முடிக்கப்படுகிறது. காருள்ளளவும் கடல்நீருள்ளளவும் வேதமுள்ளளவும் வேதகீதனுள்ளளவும் இங்ஙனே நடந்து வருமென்பதில் ஐயமில்லை. இது ஸ்ரீரங்கநாதனுடைய

திருவாணையினலமைந்தது. அப்பெருமான் மாமுனிகளிடத்தே திருவாய்மொழிப் பொருள் கேட்க விரும்பி ஒரு நாள் இவர்க்கு அருளப்பாடிட்டு 'ஜீயரே! நாளை முதலாக நம்முடைய பெரிய திருமண்டபத்திலே யிருந்து நம்மாழ்வாருடைய திருவாய்மொழியை ஈடு முப்பத்தாறு யிரம் முதலான வியாக்கியானங்களுடனே பிரவசனம் செய்து போரீர்" என்று நியமிக்க, மாமுனிகள் மஹா ப்ரஸாதமென்று உகந்து அப்படியே மறுநாள் தொடங்கி 'கங்கா ப்ரவாஹமோ? அல்லது கங்கையிற் புனிதமாய காவிரிப் பெருக்கோ?' என்னலாம்படியாக மிக அற்புதமாய் 'விசதவாக்சிகாமணி' என்கிற தமது விருது நிறம் பெறவும் ஸர்வஜ்ஞ ஸார்வபௌமர் என்கிற பட்டம் பொலியவும் பிரவசனம் செய்து வந்தார். அப்பேரது பெருமாளும் நாச்சியாருடனேகூடச் சீரிய சிங்காசனத்தமர்ந்து பேரோலக்கமாகவிருந்து ஒரு ஸம்வத்ஸரமளவும் திருச்செவி சாத்தும்படியாயிற்று. காலக்ஷேபம் முடிவுபெறும் நாளில் அழகிய மணவாளன் நாலைந்து பிராயம் வாய்ந்த அர்ச்சக குமாரனை கோலம்பூண்டு கனவேகமாகக் கோஷ்டியிடையிலே வந்து, அவரவர்கள் விலக்கினதையும் லக்ஷியம் பண்ணுமே புகுந்து, கைகூப்பி நின்று "ஸ்ரீசைலேச தயாபாத்ர"மென்று தொடங்கி முப்பத்திரண்டெழுத்துத் திருமந்திரமாகிய தனியனென்னும் ச்லோகத்தை விண்ணப்பஞ் செய்து மறைய, இவ்வதிசயத்தை நோக்கி அனைவரும் வியந்தனர். இத்தனியனை சிஷ்யவர்க்கங்கள் பட்டோலை கொண்டு மஞ்சட் காப்பு சாத்தி ஸ்ரீரங்கநாதன் திருவடிவாரத்திலே ஸமர்ப்பித்தெடுத்துத் தட்டிலே வைத்துச் சிறப்பாகக் கொண்டாடினர்கள். வடமொழி வேதத்திற்கு ப்ரணவம்போலத் தமிழ்வேதாநுஸந்தானத்திற்கு இத்தனியனே முதலும் முடிவுமாகக் கடவதென்று பெருமாளுடைய நியமனமும் பாங்காக வாய்த்தது. பின்பு சிஷ்யர்களால் பணிக்கப்பட்ட வாழித் திருநாமமும் அரங்கேசனுணையின்படி அநுஸந்தான நியமத்திற் சேர்ந்ததாயிற்று.

மாமுனிகளருளிச் செய்துள்ள ஸ்ரீஸூக்திகளின் பெருமையும் தூய்மையும் வாய்கொண்டு வருணிக்கமுடியாதது. உலகில் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர்கள் பலபல ஆசாரியர்களுமுண்டு. எனினும் மாமுனிகளின் திவ்ய ஸ்ரீஸூக்திகளின் மாதுர்யமும் காம்பீர்யமும் அர்த்த புஷ்டியும் ரஸபுஷ்டியும் மிக வியக்கத்தக்கது. ஏற்கெனவே அவதரித்துள்ள பூர்வாசார்ய திவ்ய ஸூக்திகளை ப்ரவசனம் செய்தருள்வதிலேயே மிகுந்த குதூஹலங் கொண்ட மாமுனிகள் சுதந்திரமாகச் சில நூல்களை யிட்டருளத் திருவுள்ளமுடையரல்லரேயானாலும் இவ்வுலகின் பாக்ய பரிபாகத்தினால் சிஷ்யர்களின் வேண்டுகோளுக்கிணங்கியும் எம்பெருமானது நியமனத்தைச் சிரமேற் கொண்டும் தேனே பாலே கன்னலே யமுதேயான திவ்ய க்ரந்தங்களையும் அருளிச் செய்யும்படியாயிற்று.

பிள்ளையுலகாசிரியர் அருளிச்செய்த பதினெட்டு ரஹஸ்யங்களுள் ஸ்ரீ வசநபூஷணம், தத்வத்ரயம், முமுக்ஷுப்படி என்கிற மூன்று ரஹஸ்யங்கள் மிகச் சிறந்தவையும் பிரதானங்களுமாகையாலே அம் மூன்றுக்கும் வியாக்யான மிட்டருளினர். அவரது திருத்தம்பியாரான அழகிய மணவாளப் பெருமாள் நாயனர் அருளிச்செய்த ஆசார்யஹ்ருதயமென்னும் ரஹஸ்யரத்தினத்திற்கும் வியாக்கியான மிட்டருளினர். பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செய்திருந்த வியாக்யானம் கரையானுக்கு இரையாகி லோபித்திருந்ததனால் அதைத் தாமருளிச்செய்தார். இராமாநுச நூற்றந்தாதிக்கும், அருளாளப்பெருமாளெம்பெருமானருளிச்செய்த ஞானஸார ப்ரமேய ஸாரங்களுக்கும் உரையிட்டருளினர். கீதைக்குத் தாத்பர்ய தீபமென்றொரு வியாக்கியான மியற்றியருளினர். ப்ரமாணத்திரட்டுகள், திருவாராதனப்ரயோகம், யதிராஜ விம்சதி, தேவராஜமங்களம், உபதேசரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி ஆர்த்திப்ரபந்தம் முதலியனவுமருளிச் செய்தார்.

வியாக்கியான மருளிச்செய்வதில் மாமுனிகளின் திறமை ஒப்புயர்வற்றது. ஸூத்ரம் போன்ற ஸ்ரீ லோகாசார்யர் திவ்யஸூக்திகளுக்கு அவதாரிகையிடுகிற அழகும் மூலத்திற்கு அர்த்தமருளிச் செய்கிற வைகரியும் ஆங்காங்கு அர்த்தங்களைப் பிண்டீகரித்து நிகமித்தருளுகிற சைலியும் மதாந்தரங்களைக் கண்டித்தெழுதினாலும்கூட ஒருவருடைய மனமும் நோகாதபடிக்கும் வீணான தூஷண பரிஹாஸங்கள் சிறிதும் புகாதபடிக்கும், எந்த இடத்தையெடுத்தாலும் சாஸ்த்ரார்த்தமே கைகொள்கனியாம் படிக்கும் 'ஸகல சாஸ்த்ர ஸாரஜ்ஞ பாரங்கதர் இவரொருவரே' என்று திண்ணமாக எண்ணும்படிக்கும், மயங்கவைத்தல் முதலிய குற்றங்களுக்குச் சிறிதுமிடமில்லாதபடிக்கும் ஸ்ரீஸூக்திகளருளிச் செய்தவர் மாமுனிகளொருவரே.

உண்மையில், இவ்வாசிரியருடைய ஸ்ரீஸூக்திகளை ஸேவித்தபின்பு இன்னொருவரது வாக்கில் வாயை வைத்தால் சுவைக்கேடு தோன்றியே தீரும். பல சொல்லியென்? மற்றையோருடைய நூல்களைக் காணும்போது அவரவர்களது ஞானத்தை அளவிட்டு அறியும்படியாகவுள்ளது. மாமுனிகளின் வியாக்கியானங்களை ஸேவிக்குமளவில் மாருதியை நோக்கி இராமபிரானருளிய வாசகமே நினைவுக்கு வருகிறது;

"இல்லாத வுலகத் தெங்கும் ஈங்கிவனிசைகள் கூரக்
கல்லாத கலையும் வேதக் கடலுமே யென்னுங் காட்சி
சொல்லாலே தோன்றிற்றன்றே ஆர்கொல் இச்சொல்லில் வல்லான்?
வில்லார் தோளிளையவீர! விரிஞ்சனோ விடைவலானோ"

என்று இராகவன் வியந்து கூறினதாகக் கம்பர் கூறியுள்ளாரன்றோ? அஃது உண்மையில் மணவாளமாமுனிகள் விஷயத்திலேதான் பொருந்தக் காணலாகும்.

நம்மாழ்வார் தம்முடைய பெருமையைத் திருவாய்மொழியில் "துவளில் மாமணி மாடம்" "உண்ணுஞ்சோறு பருகுநீர்" முதலான பதிகங்களில் தாமே வெளியிட்டுக் கொண்டவாறுபோல, மாமுனிகள் தாமும் ஆர்த்திப்ரபந்தத்தில் ஒரு பாசுரத்தினால் தமது பெருமையைத் தாமே அருளிச் செய்யும்படியாயிற்று நம்போல்வார் நிச்சலும் அநுஸந்தித்து உய்வதற்காக. அந்தப் பாசுரம் கேண்மின்;—

தென்னரங்கர் சீரருளுக்கிலக்காகப் பெற்றோம்
தேவனுறை திருப்பதியே யிருப்பாகப் பெற்றோம்
மன்னியசீர் மாறன் கலையுணவாகப் பெற்றோம்
மதுரகவி சொற்படியே நிலையாகப் பெற்றோம்
முன்னவராம் நங்குரவர் மொழிகளுள்ளப் பெற்றோம்
முழுது நமக்கவை பொழுதுபோக்காகப் பெற்றோம்
பின்னையொன்றுதனில்நெஞ்சு பேராமற் பெற்றோம்
பிறர்மினுக்கம் பொறாமையிலாப் பெருமையும் பெற்றோமே.

இச்செய்யுளமுதத்தையே அன்பர்கள் நிச்சலும் பருகிக் களிப்பாராக.

மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்.

மணவாளமாமுனிகளின் திருநாவீறு.

—————:o:—————

உலகில் பேசுவதெல்லாம் பேச்சல்ல, எழுதுவதெல்லாம் எழுத்தல்ல. பட்டர் ஸ்ரீ குணரத்நகோசத்தில் "அநாக்ராதாவத்யம் பஹுகுணபரீணாஹி" என்று ஆரம்பித்து ஐந்து விசேஷணங்களிட்டு வாக்விலஸிதம் இப்படியிருக்கவேணுமென்றருளிச்செய்கிறார். அப்படிப்பட்ட வாக்விலஸிதம் மணவாளமாமுனிகளினுடையதேயாகும். "பதாநாம் ஸௌப்ராத்ராத் அநிமிஷநிஷேவ்யம் ச்ரவணயோ:" என்று அந்த ச்லோகத்தில் பட்டர்பணித்த அதிசயம் மாமுனிகளின் திவ்யஸூக்திகளில்தவிர வேறெங்கும் காணக்கிடைக்காது. சொல்லமைப்பு என்பதொன்றுண்டே அது மற்றையோருடைய க்ரந்தங்களில் ஸாதாரணமாகவேயிருக்கும். மணவாளமாமுனிகளின் திவ்யக்ரந்தங்களில் அது ஆச்சரியம் அற்புதம் அஸ்யாத்ருசம் என்றே சொல்லத்தக்கதாக விளங்கும். இதைத்தெரிந்து கொள்வது எல்லார்க்கும் எளிதன்று. முராரி யென்கிற வொரு மஹாகவி "அப்திர் லங்கித ஏவ வானரபடை: கிந்த்வஸ்ய கம்பீரதாம் ஆபாதாலநிமக்நபீவரதநுர் ஜாநாதி மந்தாசல:" என்கிறான். வானரமுதலிகள் கடலைக் கடந்துவிட்டார்களானாலும் மேலெழச்சென்ற வவர்களுக்குக் கடலின் ஆழம் சிறிதும் தெரியாதென்றும் மந்தரமலையொன்றே அதனையறியவல்லதென்றும் அந்த ச்லோகத்தில் கூறப்பட்டிருப்பது போல, ஸாரஸ்வதஸாரத்தை உட்புகுந்து மர்மஸ்பர்சியாக உணரப்பெற்றவர் கடல்சூழ்ந்த மண்ணுலகுக்குள் மணவாளமாமுனிகளொருவரேயென்று குடப்பாம்பில் கையிட்டுரைப்பர் அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளில் நன்கு ஆழ்ந்தவர்கள்.

அஸூயையினாலும் த்வேஷத்தினாலும் பலர் அவருடைய ஸ்ரீஸூக்தியமுதக்கடலில் அவகாஹிக்கப்புகுவதில்லை. அவகாஹிக்கும் பாக்யம் பெற்றவர்களிலும் பலர் 'மணிப்ரவாள ஸ்ரீஸூக்திதானே' என்று ஸாமான்யமாக நினைத்து மேலெழப்பார்த்துச் செல்வர்கள். "தேநாவலோக்ய க்ருதிந: பரிபுஞ்ஜதே தம்" என்று பட்டர் அருளிச்செய்தபடி அநுபவ பாக்ய பரிபாகமுள்ளவர்கள் யாரோசில ஸூக்ருதிகளேயாவர்.

மாமுனிகளின் திவ்யக்ரந்தங்களுக்குள் தத்வத்ரய வியாக்கியானமொன்றை ஸேவிக்குங்கால்—"ஸகலசாஸ்த்ரங்களிலும் ஸ்ரீபாஷ்ய ஸுதாநிதியிலும் ஆழ அவகாஹித்த மஹாஜ்ஞானநிதி இவரல்லது வேறு எவருமில்லை" என்று சபதமிட்டுரைக்கலாம். ஞானம் என்பது வேறு, வ்யுத்பத்தி என்பது வேறு. அந்த வ்யுத்பத்தியானது ஸகலதந்த்ரங்களிலும் மணவாளமாமுனிகளுக்கு மிகவும் அதிசயிக்கத் தக்கது. இதை நிரூபிக்க அவருடைய திவ்ய ஸ்ரீஸூக்திகளில் பலபல விடங்களிருந்தாலும் ஓரிடந்தன்னையே இங்குக் குறிப்பிடுகிறேன். தத்வத்ரயமென்னும் ஸ்ரீலோகாசார்ய க்ரந்தத்தில் ஈச்வரப்ரகரணத்தில் (22) "இதுக்கு ப்ரயோஜனம் கேவலலீலை" என்றொரு சூர்ணையுள்ளது. எம்பெருமானது ஜகத்ஸ்ருஷ்டியாகிற வியாபாரத்திற்கு வெறும் லீலையே ப்ரயோஜனம் என்றபடி. ஸ்ரீபாஷ்யத்திலும் (ஸூ. 171.) * லோகவத்து லீலா கைவல்யம் * என்கிற ஸூத்ரத்தின் பாஷ்யத்திலே "ஜகத்ஸர்கே லீலைவ கேவலா ப்ரயோஜநம் * என்றும் *பரஸ்ய ப்ரஹ்மண: லீலைவ ப்ரயோஜநம்* என்றும் ஸ்ரீஸூக்தி விந்யாஸமுள்ளது. இதில் எந்த வித்வானுக்கும் எவ்விதமான விசிகித்ஸையும் எளிதாகத் தோன்றமாட்டாது. ஆனால் இங்கு மணவாளமாமுனிகளின் ப்ரஜ்ஞாவிசேஷம் ஆராய்ச்சி செய்யப்புகுந்த விதம் ஊன்றி நோக்கத்தக்கது. லீலையாவது என்ன? என்று கேட்டால் அதற்குப்பொருள் சொல்லவேண்டுமே. ஒரு காரியம் செய்யுமிடத்து அப்போதுண்டாகு மொரு மனோவினோதமொழிய பிற்பாடு வருவதொரு பலனைக் கணிசியாமல் பண்ணும் வியாபாரத்திற்கு லீலையென்று பெயர். சிறுவன் லீலைசெய்கிறானென்றால் விளையாடல் என்கிற வொரு வியாபாரத்தைச் செய்கிறா னென்பதன்றோ பொருளாகிறது. ஆகவே லீலையென்பது

ஒரு வியாபாரமென்று முடிந்தது. "ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜநம்" என்றால் இந்த வாக்யம் ஸம்ங்விதமாகிறதாவென்று பார்க்கவேணும். ஸ்ருஷ்டியும் வியாபாரமாயிற்று. ஸ்ருஷ்டியாகிற வியாபாரத்திற்கு லீலையாகிற வியாபாரம் ப்ரயோஜனமென்றதாகத் தேறுகிறது. 'ஸ்ருஷ்டிதான் லீலை' என்று ஸமாநாதிகரணமாகச் சொல்ல வேணுமேயொழிய 'ஸ்ருஷ்டிக்கு லீலை ப்ரயோஜநம்' என்று வ்யதிகரணமாக வாக்விந்யாஸம் பண்ணுவதில் ஸமந்வயம் இல்லைபோல் காண்கிறதல்லவா? ஸ்ரீபாஷ்யகாரரும் பிள்ளை லோகாசார்யரும் வ்யதிகரணமாக வாக்விந்யாஸம் செய்திருப்பதைக் கீழே யெடுத்துக்காட்டினோம். இது எப்படி பொருந்தும்? என்கிற சங்கை தோன்றுவதே ஸாமான்ய ஞானிகளுக்கு அரிது. தத்வத்ரயவியாக்யானத்தில் மணவாளமாமுனிகள் இந்த சங்கையை ஒருவாறு உத்தாபனம்பண்ணி ஸமாதானமருளிச் செய்திருக்குமழகு ஆழ்ந்த ஞானம் படைத்தவர்களுக்கே அறிய நிலமானது. அவ்விடத்து ஸ்ரீஸூக்திகள் காண்மின்;....

"லீலையாவது தாதாத்விகரஸமொழிய காலாந்தரத்தில் வருவதொரு பலத்தைக் கணிசியாமல் பண்ணும் வ்யாபாரமேயாகிலும் "இதுக்குப்ரயோஜனம்" என்று ஸ்ருஷ்டிரூப வ்யாபாரத்துக்கு ப்ரயோஜனமாகச் சொல்லுகையாலே தாதாத்விகரஸமாத்ரத்தைச் சொல்லிற்றாகக் கடவது"

என்பது மாமுனிகளின் அமுதமொழி.

இதில் "லீலையாவது..........பண்ணும் வியாபாரமேயாகிலும்" என்கிற வாக்யம் வெகு கம்பீரமானது. "பண்ணும் வ்யாபாரமாகையாலே * இதுக்குப்ரயோஜனம் கேவலலீலை* என்கிற மூலஸ்ரீஸூக்தி ஸமங்விதமாக மாட்டாதாகிலும்" என்பது இங்கு விவக்ஷிதம். மூல ஸ்ரீஸூக்தி அஸமஞ்ஜஸமாயிருக்கிறது என்பதைத் தம்திருவாக்கினால் வெளியிடக்கூசி வாக்யமருளிச்செய்கிறவழகு என்போல்வார் எடுத்துரைக்கக் கூடியதோ? "அகிலபுவந ஜந்மஸ்தேம பங்காதிலீலே" என்றும் "ஜகதுத்பத்தி ஸ்திதி ஸம்ஹார அந்த:ப்ரவேச நியமநாதிலீலம்" என்றும் ஸமாநாதிகரணமாகவே அருளிச்செய்த ஸ்ரீபாஷ்யகாரருங்கூட "ஜகத் ஸ்ருஷ்டௌ லீலைவ ப்ரயோஜநம்" என்று வ்யதிகரணமாக அருளிச் செய்தபடியால் அதையடியொற்றிப் பிள்ளை லோகாசார்யர் (மூலத்தில்) 'இதுக்குப்ரயோஜனம் கேவலலீலை' என்று அருளிச் செய்திருந்தாலும் இது சிறிது திருத்தியமைக்க வேண்டிய ஸ்ரீ ஸூக்தியேயாகும்; "இதுக்கொரு ப்ரயோஜனமில்லை; இது கேவலலீலையே" என்று வாக்ய ஸந்நிவேசமிருந்திருக்க வேணுமென்று திருவுள்ளம்பற்றிய மாமுனிகள் அதைப் பூப்பறித்தாப்போல் காட்டியிருக்கிறவிதம் சாஸ்த்ர வ்யுத்பத்தியில் ஆழ்ந்திருக்குமவர்களுக்கே நிலமாகக்கூடியது. மாமுனிகள் காட்டியருளிய ஸமாதானம் எத்தகைத் தென்னில்; தற்காலத்தில் தோன்றும் ரஸத்திற்கு ஹேதுவான வ்யாபாரத்திற்குத்தான் லீலையென்று பெயர்; ஆனால் இங்கு மூலம் ஸமங்விதமாவதற்காக அவ்வர்த்தத்தைச் சிறிது குறைத்துக் கொள்ளவேண்டும். தற்காலத்தில் தோன்றும் ரஸத்துக்கு ஹேதுவான வ்யாபாரம் என்கிற வரையில் போகாமல் தற்காலத்தில் தோன்றும் ரஸம் என்ற மட்டில் லீலாபதார்த்தமாகக் கொண்டால் மூலம் ஸமங்விதமாய் விடுகிறது என்று நிரூபித்தருளினாராயிற்று. இது லாக்ஷணிக நிர்வாஹம், ஔபசாரிகநிர்வாஹம் எனப்படும்.

"ஜகத் ஸ்ருஷ்டௌ லீலைவ ப்ரயோஜநம்" என்கிற ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்யஸூக்தியை ஒரு சதுச்சாஸ்த்ரவித்வானிடத்தில் கொடுத்து சங்கையை வெளியிட்டு ஸமாதானம் பண்ணச்சொன்னால், வெகு ச்ரமப்பட்டு நாலு நாழிகை வாக்யராசிகளைப் பரப்பிக் காடுபாய்ந்து ஏதோ கூறுவர். சுருக்கமாக அதை எழுதிக்கொடுக்கவேணுமென்று கேட்டால் ஒரு வித்வானாலும் அது த்ருப்திகரமாகச் செய்ய முடியாதென்பதை ஸத்யமாகச் சொல்லுகிறேனடியேன். மாமுனிகள் **"தாதாத்விகரஸமாத்ரத்தைச் சொல்லிற்றாகக் கடவது"** என்ற மிக

வழகியவொரு சிறு வாக்கியத்தில் முடித்தருளினது அவரொருவர்க்கே அஸாதாரணமான பாண்டித்ய ப்ரகர்ஷத்திற்குக் குன்றிலிட்ட விளக்காகும். இதை இங்கு நாம் எடுத்துக்காட்டியது—மாமுனிகள் இப்படி ஆழ்ந்து காண்பவர் என்பதற்காக மாத்திரமல்ல; இங்ஙனே நலிந்து நிர்வஹிக்கக் கூடிய ஸ்ரீஸூக்திகளையருளிச் செய்யுமியல்பு மாமுனிகளிடம் சிறிதும் காணக் கிடைக்காது என்பதற்காகவுமென்க. **விசதவாக்சிகாமணி** யென்கிறபட்டம் இவரொருவர்க்கே தகும்.

ஆராய்ச்சியில் தலைசிறந்த இப்படிப்பட்ட ஸ்ரீஸூக்திகள் மஹாசாஸ்த்ரஜ்ஞர்கள் உள் குழையத்தக்கவை மாமுனிகளின் ரஹஸ்ய வ்யாக்யான க்ரந்தங்களிலே நிதியாக அமைந்திருப்பதை உத்துநோக்குங்கால் 'நீறுபூத்த நெருப்பு' என்றொரு பழமொழியுண்டே, அது மாமுனிகளைத்தான் சேருமென்பர் பெரியோர். ஸ்ரீஸூக்தியோ தமிழ்; அர்த்தங்களோ கஹநசாஸ்த்ரார்த்தங்கள். அருளிச்செய்த மஹாசார்யரோ டம்பமென்பது சிறிதுமில்லாதவர். அவருடைய ஞானபூர்த்தியும் ஆத்மகுண பூர்த்தியுமன்றோ அழகியமணவாளனை அடிபணியச்செய்தன. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த பேராசிரியரை வழிபடும் மரபில் தோன்றினேனென்கிற பாக்ய விசேஷத்தை நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்துகுமடியேனுக்கு.

எம்பெருமானாரும் மணவாளமாமுனிகளும்.

மணவாள மாமுனிகளை எம்பெருமானாருடைய அபராவதார மென்று அஷ்டதிக்கஜாசார்யர்களும் ஸாக்ஷாதநுபவத்தினால் நிர்ணயித்துப் பல பாசுரங்களும் ச்லோகங்களும் பணித்துள்ளார்கள். அவை ஜகத் ப்ரஸித்தமானவை. அவ்வளவு ப்ரஸித்தமல்லாமல் வித்வத் கோஷ்டியிலேயே ப்ரஸித்தமானதொரு விஷயம் இங்கு விஜ்ஞாபிக்கப்படுகிறது. திருநாராயணபுரத்தில் மண்டயம் அனந்தாழ்வாரென்று ஸுப்ரஸித்தரான மஹாவித்வான் எழுந்தருளியிருந்தார். மைஸூர் அனந்தாழ்வானென்றும் அவர் வழங்கப்படுவதுண்டு. **வேதாந்த வாதாவளி** யென்று ஜகத்ப்ரஸித்தமான மஹா க்ரந்தரத்னங்களை யருளிச் செய்தவர் இவரே. இவர் ஜீவித்திருந்த காலம் மிகவும் ஸமீபமானதே. (அதாவது, சென்ற நூற்றாண்டில் எழுந்தருளியிருந்தவர்.) இவருடைய திருவுருவப்படம் இந்த ஸஞ்சிகையில் வெளிவந்திருக்கின்றது, அனைவரும் ஸேவிக்க பாக்யசாலிகளாயினர். அவருடைய சதுச்சாஸ்த்ர பாண்டித்ய ப்ரபாவங்களைக் கொண்டாடாதவர்களில்லை. அவரிடத்தில் ஸாமாந்ய சாஸ்த்ரங்கள் பயின்ற வித்வான்கள் [பல மதஸ்தர்கள்] இற்றைக்கும் ப்ரஸித்திபெற்று விளங்குகிறார்கள்.

இம்மஹாவித்வான் மைஸூர் ஸ்ரீபரகாலமடத்தில் ஆஸ்தான வித்வானாக அமர்த்தப்பட்டிருந்தார். அங்கு தேசிக ஸம்ப்ரதாயஸ்தர்களான பலவித்வான்களிடையே இவரொருவரே வரவரமுநி ஸம்ப்ரதாயஸ்தராக விளங்கிவந்தார். சாகுந்தல நாடகத்தில் "**காஸ்விதவ குண்டாவதீ**" என்கிற ச்லோகத்தில் "மத்யே தபோதநாநாம் கிஸலயமிவ பாண்டுபத்ராணாம்" என்றது நினைவுக்கு வரும்படி யெழுந்தருளியிருந்தாராம். இவரையும் தேசிக ஸம்ப்ரதாயஸ்தராக்கிக் கொள்ளவேணுமென்று அந்த மடாதிபதிஸ்வாமிக்குத் தோன்றி அந்த அவாவை அடிக்கடி தெரிவித்துவர, இவர் அதற்கு இடங்கொடாதுவந்தார். கடைசியாக, விசேஷ த்ரவ்யோபபத்திகளையும் ஜாகீர் ஜமீன்களையும் கொடுப்பதாகச் சொல்லி நிர்ப்பந்திக்கவே இவரும் சிறிது இசைவுகாட்டி யிருந்தார். 'நாளைகாலைமுதல் திருமண்காப்பை மாற்றிக் கொள்வது' என்று ஒருநாள் இவர் எண்ணி யிருக்கையில் அன்றிரவு கனவிலே எம்பெருமானார் தாமான தன்மையிலே இவர்க்கு ஸேவை ஸாதித்து உடனே மணவாள மாமுனிகளான திருக்கோலத்

துடனும் ஸேவைஸாதித்து 'நாமே அவர், அவரே நாம்' என்று சொல்லி மறைந்தருளினர். இவரும் துயில்விழித்தெழுந்து எம்பெருமானாருடைய கருணைத் திறத்திற்கு மிகவும் வியந்து தாம் எண்ணியிருந்த எண்ணத்திற்காக மிகவும் அநுதபித்து காலையநுஷ்டானங்களை முடித்துக் கொண்டு ஒரு ச்லோகத்தை யெழுதி அந்த மடாதிபதிஸ்வாமிஸன்னிதியிலே ஸமர்ப்பித்தார். அந்த ச்லோகமாவது:—

"𑌶𑍇𑌷𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌨𑌿𑌗𑌮𑌮𑌕𑍁𑌟𑌯𑍁𑌗𑍍𑌮𑌰𑌕𑍍𑌷𑌾𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌃
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌾𑌮𑌾𑌵𑌰𑌜𑌮𑍁𑌨𑌿𑌤𑌾𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌜𑌾𑌮𑌾𑌤𑍃𑌤𑌾𑌂 𑌚 ।
𑌵𑌿𑌨𑍍𑌦𑌨𑍍 𑌦𑍃𑌪𑍍𑌯𑌦𑍍𑌵𑌿𑌮𑌤𑌪𑌟𑌲𑍀𑌪𑌾𑌟𑌨𑍋𑌦𑍍𑌦𑌾𑌮𑌸𑍂𑌕𑍍𑌤𑌿𑌃
𑌭𑍂𑌯𑌾𑌦𑍍 𑌭𑌵𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌮𑌹𑌿𑌮𑌾 𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍇 𑌭𑍂𑌯𑌸𑍇 𑌨𑌃 ॥

சேஷ: ஸ்ரீமாந் நிகமமகுடயுக்மரக்ஷாப்ரவ்ருத்த:
ஸ்ரீமத்ராமாவரஜமுநிதாம் ஸௌம்யஜாமாத்ருதாஞ்ச,
விந்தந் த்ருப்யத்விமத படலீபாடநோத்தாம ஸூக்தி:
பூயாத் பவ்யப்ரதீதமஹிமா ச்ரேயஸே பூயஸே ந:—"

என்பது. அந்த ஸமயத்தில் அந்த அனந்தாழ்வான்ஸ்வாமி ந்யாய பாஸ்கர மென்கிற மஹா க்ரந்த மெழுதிக் கொண்டிருந்தார். அதில் இரண்டாவது பரிச்சேத மெழுதிவருகையில் இந்த மஹாநுக்ரஹம் நேர்ந்தபடியினுல் அந்த மஹா க்ரந்தத்தோடுகூடவே இவ்வநுக்ரஹ விசேஷமும் சாச்வதமாக உலகில் விளங்கவேணுமென்று கருதி மேலே குறித்த ச்லோகத்தை அந்த க்ரந்தத்தில் இரண்டாவது பரிச் சேதத்தில் விந்யாஸம் செய்தருளித் தாமே அச்சிட்டு வெளியிட்டார். இந்த ச்லோகத்தின் கருத்தாவது—உபய வேதாந்தங்களையும் காத்தருள வேணுமென்று திருவுள்ளங்கொண்ட திருவனந்தாழ்வான் எம்பெருமானாராகத் திருவவதரித்து ஸம்ஸ்க்ருதவேதாந்த குத்ருஷ்டிகளை நிரஸித்தும், மணவாளமாமுனிகளாகத் திருவவதரித்து த்ராவிட வேதாந்த குத்ருஷ்டிகளை நிரஸித்தும் இப்படி உபய வேதாந்த ப்ரதிஷ்டாபனம் செய்து பெருமை பெற்றவன். நமக்கு அத்திருவனந்தாழ்வான் ஸகலவித நன்மைகளும் அளித்தருளவேணும்—என்பதாம்.

முக்கியமான குறிப்பு ;—அவ்வனந்தாழ்வான்ஸ்வாமி பணித்த வேதாந்த வாதாவளிக ளெல்லாம் அவருடைய காலத்திற்குப் பிறகு கீர்த்திமூர்த்திகளான திருநாராயணபுரம் குப்பண்ணஸ்வாமி, காஞ்சீ குன்றபாக்கம் சீமாச்சார்யஸ்வாமி முதலான வித்வத்வரேண்யர்களால் பிரசுரம் செய்யப்பட்டன. ந்யாய பாஸ்கரம் மாத்திரம் அனந்தாழ்வான்ஸ்வாமி யெழுந்தருளியிருந்தபொழுதே அவர்தாமே தெலுங்கு லிபியில் அச்சிட்டது. அது அச்சிட்டு முடிந்த பின் அதில் ஊடேயூடே மற்றும் பல விஷயங்கள் சேர்க்கத் தோன்றி அவற்றை ஆங்காங்கெழுதி மறுபடியும் வேறு பிரதி அச்சிடுவதாக இருக்கையில் அவர் லீலாவிபூதியை விட்டகல நேர்ந்தது. பிறகு அவற்றையெல்லாஞ் சேர்த்து ஸ்ரீகாஞ்சீ ஸுதர்சன அச்சுக்கூடத்தில் தேவநாகராக்ஷரத்தில் ஸுபரிஷ்க்ருதமாக அந்த மஹா க்ரந்தம் அச்சிடப்பெற்றது. மேலே குறித்த ச்லோகம் மங்கள ச்லோக ரூபமாக விருப்பதால் அது க்ரந்தத்தின் ஆதியிலோ அந்தத்திலோ இருக்கவேண்டியது ப்ராப்தமாக, அப்படியில்லாமல் இடையில் இருந்ததனுல் ஸந்தேஹம் தோன்றி அப்போது திருநாராயண புரத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உவே. வித்வான் மண்டயம் ஆழ்வார் ஸ்வாமிக்கு ஸ்ரீகாஞ்சீ (ஜகத்குரு.) அனந்தாசார்ய ஸ்வாமியினுல் பத்ரிகை யனுப்பப்பட்டது. அப்போது அந்த ஆழ்வார்ஸ்வாமியினுல் மேலேவிவரித்த தத்துவம் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த ந்யாய பாஸ்கர க்ரந்தம் இரண்டாவது பரிச்சேதம் எழுதிக் கொண்டிருக்கையில்தான் அந்த ச்லோகம் அவதரிக்க ப்ராப்தமாயிற்றென்று.

மணவாளமாமுனிகளும் அழகியமணவாளனும்

தென்திருவரங்கங் கோயில் கொண்ட தெய்வசிகாமணி நம்மணவாள மாமுனிகளுக்குத் தான் சிஷ்யனாகி அவரைத்தனக்கு ஆசார்யனாகக் கொண்டு க்ருதார்த்தனாகக் குதூஹலித்தான். திருவாய்மொழிக்குச் சிறந்த வியாக்கியானமாக அமைந்த ஈடு முப்பத்தாறாயிரப்படியின் விசேஷார்த்தங்களை மணவாள மாமுனிகளின் திருவாக்கினால் கேட்கப்பெற வேணுமென்று ஆவல் கொண்டான். தனது திருக்கோயிலின் திருமுன்பே கருடமண்டபத்தில் எழுந்தருளி யிருந்து ஸாதித்தருள வேணுமென்று கட்டளையிட்டனன். அதைக்கேட்டவுடனே மாமுனிகள்,

“ நாமார் பெரியதிரு மண்டபமார் நம்பெருமாள்
தாமாக வெம்மைத் தனித்தழைத்து—நீமாறன்
செந்தமிழ்வே தத்தின் செழும்பொருளை நாளுமிங்கே
வந்துரையென் றேவுவதே வாய்ந்து.”

என்று நைச்சியந்தோற்ற அநுஸந்தித்து மறுநாள் தொடங்கி ஓராண்டளவும் பகவத் விஷய ப்ரவசனம் நடத்திவர, ஸமாப்தி தினத்தில் ஸ்ரீரங்கநாதன் ஒரு சிறு குமாரனாய்த் திருவோலக் கத்திலே வந்து நின்று,

“ ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம் ”

என்கிற திவ்யபத்யத்தைக் கைகூப்பி நின்று விஜ்ஞாபித்தனனாக இதிஹாஸம் ப்ரஸித்தமாக வுள்ளது. இதுவொரு அதிசயோக்தியான இதிஹாஸமாயிருக்கலாமென்று சிலர் நினைக்கக் கூடும். மணவாளமாமுனிகள் திருவடிகளிலும் அவருடைய வைபவங்களிலும் ப்ரதிபத்தி யுள்ளவர்களுங்கூட இதுவொரு அதிசயோக்தியென்றே நினைக்கக்கூடும். இத்தனியனில் சொற்கள் அமைந்திருக்கிற அமைப்பை ஆராயுமிடத்தில் இது தெய்வவாக்கேயன்றி மானிட வாக்காக இருக்க முடியாதென்பதை ப்ராமாணிகர்கள் எளிதிலுணரலாம். ஏன் ? **ஸ்ரீசைலேச தயாபாத்ர** மித்யாதி ச்லோகம் ஸாதாரணமாக வொரு வ்யுத்பந்நனால் இயற்ற முடியாததோ ? இதைவிட இன்னமும் அதிசயித்ததாக இயற்ற முடியுமே. இது தெய்வவாக்காகவே யிருக்க வேணுமென்று எதுகொண்டு சொல்லுவது ? என்னில் ; அதை நன்கு நிரூபிக்கிறோமிங்கு.

இந்த ச்லோகமருளிச் செய்தவனாகச் சொல்லப்படுகிற பெருமான்தானே பண்டு இராமபிரானாகவும் கண்ணபிரானாகவும் திருவவதாரம் செய்தருளி யிருந்தவனென்பதில் ஒருவர்க்கும் ஸந்தேஹமில்லையே. “ மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய அடுதிறலயோத்தி யெம்மரசே அரங்கத்தம்மா ! ” என்றும், “ கோவலனாய் வெண்ணெயுண்டவாயன் அண்டர் கோனணியரங்கன் ” என்றும், “ மதுரைமா நகரந்தன்னுள் கவளமால் யானைகொன்ற கண்ணனை யரங்கமாலை ” என்றும் ஆழ்வார்கள் ஸ்ரீராம ஸ்ரீக்ருஷ்ணமூர்த்தியாகவே அரங்கநாதனை அருளிச்செய்திருப்பது அபலபிக்க முடியாததன்றோ.

அப்படி இராமபிரானாகத் திருவவதரித்திருந்த காலத்திலும் கண்ணபிரானாகத் திருவவதரித்திருந்த காலத்திலும் சில வியக்திகளிடத்தில் ஆச்ரயித்து, அவ்விடங்களில் திருவுள்ளத்திற்கு த்ருப்தியில்லாமலே முடிந்திருக்கிறது. ஒவ்வோரிடத்திலும் ஒவ்வொரு குறைகண்டு வெறுப்புடனிருக்க நேர்ந்தது. அந்த வெறுப்பெல்லாந்தீர இப்போது மணவாளமாமுனிகளை

ஆச்ரயித்து "ஸதாசார்ய லக்ஷணபூர்த்தியுள்ள இவரை ஆச்ரயிக்கப் பெற்றோமே!" என்று மகிழ்ச்சி கொண்டமை இந்த ச்லோகத்தில் ஒவ்வொரு விசேஷணத்திலும் ஸ்புடமாகக் காட்டப் பட்டிருப்பதை நிரூபிக்கிறோம் காண்மின்;—

1. **ஸ்ரீசைலேசதயாபாத்ரம்** என்பது முதல் விசேஷணம். ராமாவதாரத்தில் சைலேச தயாபாத்ரமான வொரு வ்யக்தியை வணங்கிக்கெட்டேன்: இப்போது ஸ்ரீசைலேசதயாபாத்ர மான வ்யக்தி விசேஷத்தை வணங்கி வாழ்கிறேன் என்கிறது. ராமாவதாரத்தில் வணங்கப் பட்ட சைலேசதயாபாத்ரமான வ்யக்தி யாரென்னில்; ஸுக்ரீவன். சைலமாவது ரிச்யமூக பர்வதம். அதற்கு ஈசர்—மதங்கமுனிவர். அவருடைய தயைக்குப் பாத்ரபூதன் ஸுக்ரீவன் என்பது ஸ்ரீராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் பதினோராவது ஸர்க்கத்திலுள்ள கதையினால் ஸ்பஷ்டம். ஆயிரம் யானை பலங்கொண்டவனை **துந்துபி** யென்னுமரக்கன் எருமைக்கடா வடிவமெடுத்துக் கிஷ்கிந்தைக்குவந்து வாலியைச் சண்டைக்கழைக்க, இருவர்க்கும் பிரபல மான போர்நடந்து வாலியினால் துந்துபி சரீரம் முழுதும் மடியும்படி பிசையப்பட்டு அவ்வரக் கன் மரணமடைந்து தரையில் விழ, வாலி அவனுடைய வுடலை ஒரு யோசனை தூரம்போய் விழும்படி வீசியெறிய, அப்போது அவனது வாயிலிருந்து ரத்தத்துளிகள் காற்றினால் தள் ளுண்டு [சைலேசரான] மதங்கமாமுனிவரின் ஆச்ரமத்தில்போய்விழ, அதைக்கண்ட அம்முனி வர் மிகுந்த சீற்றங்கொண்டு தன் ஞானத்ருஷ்டியினால் இங்ஙனம் தீச்செயல் செய்தவன் வாலி யென்றுணர்ந்து "பரிசுத்தமான எனது ஆச்ரமத்தை இவ்விதம் அபரிசுத்தமாக்கினவன் யாவ னோ அவனும் அவனன்பர்களும் இவ்வாச்ரம பரிஸரங்களில் வந்தால் உடனே மரணமடையக் கடவர்கள்" என்று சாபமிட்டு அச்சாபம் நடத்தைக்கு வருவதற்கு ஒரு நாள் கெடு கொடுத் திருப்பதாகவும் சொல்ல, உடனே அவ்வனத்திலுள்ள [வாலியைச்சேர்ந்த] வானரர்களெல்லா ரும் ஓடிச்சென்றனர். சாபபயத்தினால் வாலி அவ்விடம் வருவதற்கில்லாதபடியாயிற்று. அவ னுடைய ஸம்பந்தமற்றவனை ஸுக்ரீவன் மாத்திரம் தனது அன்பர்களுடன் அவ்வாச்ரமத்தில் வாழ்ந்து வந்தனனாதலால் அவன் சைலேச தயாபாத்ரமாயினன். "**ஸுக்ரீவம் சரணம் கத:**" என்கிறபடியே அவனை வணங்கியிருந்த இராமன் பிறகு அவனோடே மனஸ்தாபப்பட நேர்ந்து விட்டது. அவ்விஷயம் கிஷ்கிந்தாகாண்டம் முப்பதாவது ஸர்க்கத்தில் விளங்கியதே. அதா வது—மாரிகாலம் முடிந்தபின்பும் ஸுக்ரீவன் சேனைகளைத் திரட்டிக்கொண்டு வராமற்போகவே பெருமாள் இளையோனை நோக்கி 'லக்ஷ்மணா! இன்னமும் சுக்ரீவன் என்னை அடியோடு மறந்து வாளாகிடக்கின்றனன்காண்; செய்ந்நன்றி மறந்த காதகனன்றோ சுக்ரீவன்; நீ உடனே அவ னிடஞ்சென்று நான் சொன்னதாகச் சொல்லு; செய்ந்நன்றி மறந்த பாபிஷ்டன் புருஷர்களிற் கடையானவன்; அவன் மரணமடைந்தால் அவனது உடலை மாமிசந்தின்னும் ஜந்துக்களும் தின்னமாட்டா. லக்ஷ்மணா! என் பராக்ரமத்தைச் சுக்ரீவன் நன்றாக அறிந்திருந்தும் சிறிதும் அச்சமில்லாமல் கிடக்கிறானே; வாலி சென்றவழி அவனுக்கும் திறந்திருக்கிறதென்று அவனி டம் கூறு. அவனை உற்றாருறவினரோடும் யமபுரமனுப்பச் சித்தமாயிருக்கிறேனென்று தெரிவி' என்று கூறியிருப்பதேயாம். "**ஸுக்ரீவம் நாதமிச்சதி**" என்றும் "**ஸுக்ரீவம் சரணம் கத:**" என்றும் ஈடுபட்டவிடத்திலே இப்படி மனஸ்தாபப்பட நேர்ந்துவிட்டதனால், முன்பு சைலேச தயாபாத்ர பூதனான வொருவனை வணங்கிவருந்தின குறைதீர இப்போது ஸ்ரீசைலேச தயா பாத்ர பூதரை வணங்கி வாழ்கின்றே னென்றதாயிற்று. திருமலையாழ்வாரென்கிற திருவாய் மொழிப்பிள்ளையின் இன்னருளுக்கு இலக்கான மாமுனிகளை வணங்குகின்றேனென்கை.

2. இனி இரண்டாவது விசேஷணம் **தீபக்த்யாதி குணார்ணவம்**. ஸ்ரீராமனாக அவதரித் திருந்த அக்காலத்திலே ஸுக்ரீவன் காலிலே குனிந்ததுபோலவே லவணார்ணவத்தின் காலிலும்

